




We Shine Academy™

guiding you to get through

# நடப்பு நிகழ்வுகள்
# (CURRENT AFFAIRS)
## மார்ச் - 2020

We Are Here..!! To Guide You..!!






# WeShine Study Circle

# TNPSC

## நடப்பு நிகழ்வுகள்

## (CURRENT AFFAIRS)

## மார்ச் - 06.03.2020

Main Office @

**WeShine Study Circle**
Chrompet, Chennai
Phone: 8939144344, 8939244344

Branch Office @
**WeShine Study Circle**

Plot No: 47/60, "AK" Block,
7th Main Road, Anna Nagar
Chennai, Tamil Nadu – 600 040.

3rd Floor, West Wing, GokulArcarde,
No.2, Sardar Patel Road, Adyar
Chennai, Tamil Nadu– 600020.

https://weshineacademy.com

# பொருளடக்கம்


- தமிழக நிகழ்வுகள்
- இந்திய நிகழ்வுகள்
- சர்வதேச நிகழ்வுகள்
- அறிவியல் மற்றும் தொழில்நுட்பம்






## தமிழக நிகழ்வுகள்

- **இந்தியாவில் உயர்கல்வி பயில்வோர் எண்ணிக்கையில், தமிழகம் முதலிடம்** வகிப்பதாக **முதல்வர் எடப்பாடி கே.பழனிசாமி** தெரிவித்தார்.
    - **செய்தித் துளிகள் :**
        - கடந்த 2011-ஆம் ஆண்டில் 100-க்கு 34 பேர் உயர் கல்வி படித்த நிலையில், தற்போது 100-க்கு 49 பேர் உயர்கல்வி படித்து வருகின்றனர். இதனால், இந்திய அளவில் உயர்கல்வி பெறுவதில் முதன்மை மாநிலமாக தமிழகம் விளங்கி வருகிறது.

## இந்திய நிகழ்வுகள்

- **பிட் காயின்' உள்ளிட்ட மெய்நிகர் நாணயங்களுக்கு இந்தியாவில் விதிக்கப்பட்டிருந்த தடையை உச்சநீதிமன்றம்** மார்ச் 4-ஆம் தேதி **நீக்கியது.** இதன் மூலம் மெய்நிகர் நாணயங்களுக்கு இந்திய ரிசர்வ் வங்கி (ஆர்பிஐ) கடந்த 2018-ஆம் ஆண்டு விதித்த தடை முடிவுக்கு வந்துள்ளது.
    - **செய்தித் துளிகள் :**
        - மெய்நிகர் நாணயப் பரிவர்த்தனைகள் அனைத்தும், பொதுவான இணையதள தகவல் சேமிப்பகத்தில் மேற்கொள்ளப்படும் மின்னணு தகவல் பதிவுகளாகவே

நிகழ்கின்றன. மெய்நிகர் பணப் பரிவர்த்தனை செய்யும்போது, அது பொதுவான ஒரு இணையதள கணக்குப் பதிவேட்டில் பதிவு செய்யப்படுகிறது. இதுவரை **2095 வகையிலான மெய்நிகர் நாணயங்கள் புழக்கத்தில் உள்ளன.**

- இயற்கைக் குறியீடு (NATURAL INDEX) அமைப்பானது **2020ஆம் ஆண்டின் இயற்கைக் குறியீட்டுத் தரவரிசையை** வெளியிட்டுள்ளது.
  - **அறிவியல் மற்றும் தொழில்துறை ஆராய்ச்சிக் குழு** (CSIR - Council of Scientific and Industrial Research) குறியீட்டில் **முதலிடத்தில்** உள்ளது.
  - பெங்களுருவின் இந்திய அறிவியல் நிறுவனம் (IISC - Indian Institute of Science) இரண்டாவது இடத்தைப் பிடித்துள்ளது.
  - மூன்றாவது இடத்தை மும்பையில் உள்ள டாடா அடிப்படை ஆராய்ச்சி நிறுவனம் (TIFR – Mumbai) பிடித்துள்ளது.
  - **செய்தித் துளிகள்** :
    - 2018 டிசம்பர் முதல் 2019 நவம்பர் வரை நிறுவனங்கள் மேற்கொண்ட ஆராய்ச்சியின் அடிப்படையில் இத்தரவரிசை அமைந்துள்ளது.
    - எண்களின் மொத்த மேற்கோளும் மற்றும் ஒரு கட்டுரைக்குக் கிட்டும் பகிர்வு சதவீதத்தைப் பொருத்தே இவ்வாராய்ச்சியின் முடிவு அமைந்துள்ளது.

## சர்வதேச நிகழ்வுகள்

- **ஐரோப்பிய ஆணையமானது மொனாக்கோவில் ஒரு புதிய உலகளாவிய கூட்டிணைவைத் தொடங்கியுள்ளது.**
    - பல்லுயிர்ப் பாதுகாப்பின் அவசியம் குறித்து விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்காக ஒரு வலுவான கூட்டிணைவிற்கு இந்த ஆணையம் அழைப்பு விடுத்துள்ளது.
    - **செய்தித் துளிகள்:**
        - 2020ஆம் ஆண்டு அக்டோபரில் நடைபெற இருக்கும் உயிரியல் பன்முகத் தன்மை ஒப்பந்தம் தொடர்பான பங்காளர்கள் மாநாட்டின் 15வது அமர்விற்கு முன்னதாக, இந்த ஆணையக் குழுவானது இயற்கைப் பிரச்சினைகள் குறித்து பொது மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்துவதை நோக்கமாகக் கொண்டுள்ளது

## அறிவியல் மற்றும் தொழில்நுட்ப நிகழ்வுகள்

- **"நானோ அறிவியல் மற்றும் தொழில்நுட்பம் குறித்த சர்வதேச மாநாடு"** (ஐகான்சாட்) மார்ச் 5-7 **கொல்கத்தாவில்** நடைபெறுகிறது
    - அறிவியல் மற்றும் தொழில்நுட்ப அமைச்சகத்தின் கீழ் செயல்படும் அறிவியல் மற்றும் தொழில்நுட்பத் துறை (டிஎஸ்டி) நானோ மிஷன் இதை ஏற்பாடு செய்துள்ளது
    - **செய்தித் துளிகள் :**
        - நாடு மற்றும் வெளிநாடுகளில் இருந்து இளம் ஆராய்ச்சியாளர்கள் மற்றும் மாணவர்களுக்கு ஒரு

சாத்தியமான தளத்தை வழங்குவதை மாநாடு நோக்கமாகக் கொண்டுள்ளது.

- மேம்பட்ட தொழில்-கல்வி தொடர்புகளுக்கான தொழில்முனைவோர் மற்றும் தொடக்க நிறுவனங்களுக்கான ஒரு தொழில்துறை அமர்வை இந்த மாநாடு நடத்தும்.

## திருக்குறள்

**குறள் : 129**

குறள் பால் : அறத்துப்பால்

குறள் இயல் : இல்லறவியல்

குறள் அதிகாரம் : அடக்கம் உடைமை

**தீயினாற் சுட்டபுண் உள்ளாறும் ஆறாதே**

**நாவினாற் சுட்ட வடு.**

**விளக்கம்:** நெருப்பு சுட்ட புண்கூட ஆறி விடும் ; ஆனால் வெறுப்புக் கொண்டு திட்டிய சொற்கள் விளைத்த துன்பம் ஆறவே ஆறாது.

We Shine Academy™